# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.வி.மு.ச. பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8044396

1. District மாவட்டம்: Vellore PS காவல் நிலையம்: Vigilance & Anti-Corruption Year ஆண்டு: 2021 FIR No. முதல் தகவல் அறிக்கை எண்: 16/2021 Date நாள்: 01.10.2021

2. (i) Act சட்டம்: The prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7(a) of PC (Amendment) Act 2018
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Cr.P.C Sections பிரிவுகள்: 102 Cr.P.C
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும் பிரிவுகளும்

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல்: 30.09.21 Date to நாள் வரை: 01.10.21
   Time Period நேர அளவு Time from நேரம் முதல்: - Time to நேரம் வரை: -
   (b) Information Received at P.S. Date காவல் நிலையத்தில் தகவல் கிடைத்த நாள்: 01.10.2021 Time நேரம்: 16.30 hrs
   (c) General Diary Reference Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: Volume-III Time நேரம்: 17.30 hrs

4. Type of Information Written/ Oral தகவலின் வகை எழுத்து மூலம் / வாய் மொழியாக: - written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS குற்ற நிகழ்வின் இடம் (அ) காவல்நிலையத்திலிருந்து திசையும் தூரமும்: - RTO Check post, Katpadi, 11 Km North
   Beat Number ரோந்து காவல் எண்: - (b) Address முகவரி: RTO check post, Katpadi, vellore District
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S. இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்த நிகழ்வெனில், அந்நிலையத்தின் பெயர் District மாவட்டம்: -

6. Complainant /Informant (a) Name புகார்தாரர்/ தகவல் தருபவர் பெயர்: Tr. C. Murugan (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர்: Chinnasamy
   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு: 05.01.1968 (d) Nationality நாட்டினம்: Indian (e) Passport No கடவுச்சீட்டு எண்: -
   Date of Issue வழங்கப்பட்ட நாள்: - Place of Issue வழங்கப்பட்ட இடம்: -
   (f) Occupation தொழில்: Deputy Inspection cell officer (g) Address முகவரி: O/o the District Inspection Cell, Collectorate, Sathuvachari, Vellore

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tmt. R. Prema Gnanakumari (55/2021), Motor vehicle Inspector (Non tech), RTO check post, Katpadi @ Christianpet, vellore District

8. Reasons for delay in reporting by the complainant / Informant
   புகார்தாரர் / தகவல் கொடுப்பவர் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவுபட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் (தேவைப்பட்டால் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved: —
களவுபட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு வழக்கு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required):
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவைப்பட்டால் தனித் தாளில் இணைக்கவும்)

Separate sheet attached

13. Action taken: Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS .................... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை: மேலே குற்ற முறையீட்டில் கண்டவை பிரிவு 2ல் குறிப்பிட்ட சட்ட பிரிவுகளின்படி குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுகின்ற .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லைக் காரணம் கூறி புலனாய்வுக்கு .................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் தகவல் அறிக்கை முறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஒத்துக்கொள்ளப்பட்டு, அதன் படி ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது

[signature] 01/10/2021 — S. Vijayalakshmi 1/10/21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாள், நேரம்
01.10.2021 @ 18.30 hrs

Name: பெயர் S. Vijayalakshmi
Rank: நிலை Inspector of Police
Vigilance & Anti-Corruption,
Vellore.

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது.</u> இன்று 01.10.2021-ஆம் தேதி 16.30 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, திரு.C.முருகன், மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர் என்பவரின் புகாரை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு: வேலூர் 01.10.2021 அனுப்புநர், C. முருகன், மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அம்மையீர், நான் வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலராக உள்ளேன். 30.09.2021 அன்று இரவு சுமார் 20.00 மணியளவில் வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுக்கா, காட்பாடியில் உள்ள போக்குவரத்து துறை சோதனை சாவடியில் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.R. பிரேமா ஞானகுமாரி என்பவர் சோதனை சாவடியை கடந்து செல்லும் கனரக வாகனங்கள், பிற மாநில வாடகை வாகனங்கள் மற்றும் இதர வாகனங்களில் வாகன உரிமையாளர்கள் மற்றும் வாகன ஓட்டிகளிடம் நேரிடையாகவும் மற்றும் இடைத்தரகர்கள் மூலம் அதிகாலை நேரங்களில் பெருமளவு தொகையினை கட்டாயப்படுத்தி அதிகமாக பணத்தை லஞ்சமாக வசூல் செய்வதாகவும், மேலும், அவ்வாறு வழங்க மறுப்பவர்களின் வாகனங்களை தற்காலிகமாக நிறுத்தி வைத்தும் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு இடையூறு மற்றும் அலைகழிப்பு ஏற்படுத்துவதாகவும், மேலும் தமிழ்நாடு மோட்டார் வாகன சட்டம் மற்றும் விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்காமல் பெருமளவு தொகையினை லஞ்சமாக பெறுவதாகவும் எனக்கு வந்த நம்பகமான தகவலின் பேரில், நான் அத்தகவலை எனது நம்பகமான தகவலாளர்கள் மூலம் ஊர்ஜிதம் செய்து கொண்டு, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளருக்கு அன்றைய தினம் இரவு சுமார் 23.45 மணியளவில் தெரியப்படுத்தினேன். அதன்பிறகு 01.10.2021அன்று அதிகாலை 04.45 மணியளவில் நான் மற்றும் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினருடன் புறப்பட்டு மேற்படி காட்பாடி கிருஷ்டியான்பேட்டையில் உள்ள மண்டல போக்குவரத்து சோதனை சாவடியிடம் இருதுறை திடீர் சோதனை மேற்கொள்ள காலை 05.25 மணிக்கு வந்தபோது, சோதனைச்சாவடியில் பெண் மோட்டார் வாகன ஆய்வாளர் சீருடையில் ஒருவரும், ஒரு பெண் மற்றும் மூன்று ஆண் நபர்கள் பணியில் இருந்தார்கள். மேற்படி சோதனை சாவடியில் பணியில் இருந்த அலுவலர்களிடம் நான் மற்றும் காவல் ஆய்வாளர் திருமதி.S.விஜயலட்சுமி மற்றும் இரு துறை திடீர்சோதனைக்குழுவினர் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு,

சீருடையில் இருந்தவரை விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் R.பிரேமா ஞானகுமாரி என்றும், தான் காட்பாடி கிருஷ்டியான்பேட்டை போக்குவரத்து சோதனை சாவடியில் மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.நு.அ.) ஆக கடந்த 16.08.2021-ஆம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாகவும் கூறினார். மேலும், மற்றொரு பெண்ணை விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் அமிர்தம் என்றும், காட்பாடி மோட்டார் வாகன சோதனைச்சாவடியில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருவதாக கூறினார். மேற்படி நபர்களிடம் இருதுறை திடீர் சோதனைக்குழுவினர் தாங்கள் வந்த நோக்கத்தை கூறி, தங்களிடம் எந்த பணமோ, பொருளோ இல்லை என்று சுயபரிசோதனை செய்து காண்பிக்கப்பட்டது. பின்னர், நான் மற்றும் குழுவினர் பணியில் சீருடையில் இருந்த திருமதி.R.பிரேமா ஞானகுமாரி, மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில் நுட்பம் அல்லாதவர்) அவர்களை விசாரிக்க தான் 30.09.2021 ஆம் தேதி காலை 08.00 மணி முதல் தற்சமயம் வரை பணியில் உள்ளதாக சொன்னார். மேலும் அவர் இரண்டு சுழற்சி பணியையும் சேர்த்து பார்ப்பதாக கூறினார். பின்னர் அவரை, காவல் ஆய்வாளர் திருமதி.S.விஜயலட்சுமி அவர்கள் திரேக சோதனை செய்ய, அவரிடம் பணம் ஏதுமில்லை. பின்னர், திருமதி.R. பிரேமா ஞானகுமாரி அவர்களின் மேஜை மற்றும் அவருக்கு இடப்புறம் உள்ள கப்போர்டு ஆகியவற்றை சோதனை செய்ய அதில் பணம் ஏதுமில்லை. பின்னர், அந்த அறையில் ஜன்னலுக்கு கீழே உள்ள பிளைவுட்டாலான இழுவறைகளுடன் கூடிய கப்போர்டை சோதனை செய்ய, அந்த கப்போர்டுக்கு கீழே வடகிழக்கு மூலையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பழைய செய்தித்தாள்களுக்கிடையில் பணம் கத்தையாக இருந்தது. அதை எடுத்து எண்ணிப் பார்க்க, அதில் பணம் ரூ.25,000/- இருந்தது. அப்பணம் குறித்து, திருமதி.பிரேமா ஞானகுமாரி அவர்களையும், சோதனைச்சாவடியில் பணியில் இருந்தவர்களையும் விசாரிக்க, அந்த பணத்திற்கு யாரும் உரிமை கோரவில்லை. எனவே, தக்க முகாந்திரம் மற்றும் விளக்கம் கூற இயலாத அப்பணம் ரூ.25,000/- கைப்பற்றப்பட்டது. பின்னர் சோதனை சாவடியில் பணியில் இருந்த அலுவலக உதவியாளாரை விசாரிக்க, அவர் தனது பெயர் திருமதி.அமிர்தம் என்றும், தான் இச்சோதனை சாவடியில் அலுவலக உதவியாளராக கடந்த 23.09.2020 முதல் பணிபுரிந்துவருவதாக கூறினார். அவரது பக்கத்தில் இருந்த கைப்பை குறித்து விசாரிக்க, அது தன்னுடைய கைப்பைதான் என்றும், அதில் இருந்த ரூ.950/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் குறித்து விசாரிக்க, தன்னுடைய சொந்த பணம் என்றும் செலவுக்காக வீட்டில் இருந்து எடுத்து வந்த பணம் என்று சொன்னதால், அந்த பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும், சோதனைச்சாவடியில் இருந்த மூன்று ஆண் நபர்களில் ஒருவரை விசாரிக்க, அவர் தன் பெயர் A.R.நித்தியானந்தம் என்றும், தான் இந்த சோதனை சாவடியில்

பணியாளராக (தனி நபர்) இதற்கு முன்பிருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களால் பணி அமர்த்தப்பட்டு, கடந்த ஒன்பது வருடங்களாக சோதனை சாவடி சம்மந்தமான வேலைகளை செய்து வருவதாகவும் அதற்காக தினமும் தனக்கு பணியில் இருக்கும் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் ரூ.1,000/- கொடுப்பார்கள் என்று கூறினார். மேற்படி நபரை சோதனை செய்ய, அவர் சட்டையின் மேல்புற பாக்கெட்டில் பணம் ரூ.800/- இருந்தது. அப்பணம் குறித்து விசாரிக்க, தன்னுடைய சொந்த செலவுக்காக எடுத்து வந்த பணம் என்று சொன்னதால், அந்த பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர், சோதனை சாவடியில் இருந்த இரண்டாவது ஆண் நபரை விசாரிக்க, அவர் தன் பெயர் சுகந்த் என்றும், தான் இந்த சோதனை சாவடியில் பணியாளராக (தனி நபர்) இதற்கு முன்பிருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களால் பணி அமர்த்தப்பட்டு, கடந்த 3 வருடங்களாக வேலை செய்து வருவதாகவும், சாலையில் செல்லும் வாகனங்களை நிறுத்தும் பணியை செய்து வருவதாகவும், அதற்காக தினமும் தனக்கு பணியில் இருக்கும் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் ரூ.600/- கொடுப்பார்கள் என்று கூறினார். மேலும், அவர் தன்னுடைய பணி இரவு நேரம் மட்டும்தான் என்று சொன்னார். பின்னர், அவரை சோதனை செய்ய, அவர் சட்டையின் மேல்புற பாக்கெட்டில் பணம் ரூ.820/- இருந்தது. அப்பணம் குறித்து விசாரிக்க, தன்னுடைய சொந்த செலவுக்காக வீட்டில் இருந்து வரும்போது எடுத்து வந்த பணம் என்று சொன்னதால், மேற்படி பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர், சோதனை சாவடியில் இருந்த மூன்றாவது ஆண் நபரை விசாரிக்க, அவர் தன் பெயர் தீபக் என்றும், தான் இந்த சோதனை சாவடியில் பணியாளராக (தனி நபர்) இதற்கு முன்பிருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களால் பணி அமர்த்தப்பட்டு, கடந்த 2 வருடங்களாக வேலை செய்து வருவதாகவும், தான் சோதனைச்சாவடியில் உள்ளவர்களுக்கு டீ வாங்கிக் கொடுக்கும் வேலை செய்து வருவதாகவும், அதற்காக தினமும் தனக்கு பணியில் இருக்கும் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் ரூ.600/- கொடுப்பார்கள் என்று சொன்னார். பின்னர், அந்த நபரை சோதனை செய்ய அவரிடம் பணம் ஏதுமில்லை. பின்னர், மோட்டார் வாகன சோதனைச்சாவடி கௌண்டர் உள்ள அறையை சோதனை செய்தபோது, கணினி மேஜையின் வலது புற இழுவறையை சோதனை செய்ய அதில் சீல்களும், காகிதங்களும் இருந்தன. அதனை அடுத்துள்ள கணினி மேஜையின் வலது புறத்தில் இருந்த இழுவறையை சோதனை செய்ய அதில் பணமானது வெள்ளைத்தாளில் சுற்றப்பட்டு, இரப்பர் பேண்டு போட்டு வைக்கப்பட்டிருந்தது. அந்த பணம் குறித்து, மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.R. பிரேமா ஞானகுமாரி அவர்களிடம் விசாரிக்க, அவர் நேற்று 30.09.2021 காலை 08.00 மணி முதல் இரவு 20.00 மணிவரை தான் பணியில் இருந்தபோது வசூல்

செய்யப்பட்டது என சொல்லி, அதன் Account Statement எடுத்து, கையொப்பமிட்டு கொடுத்தார். அதில் User: pkumari Period 30.09.2021 to 30.09.2021 எனவும், Total 36,210 என இருந்தது. பின்னர், கட்டாக இருந்த பணத்தை எண்ணிப்பார்க்க, அதில் பணம் ரூ.36,210/- சரியாக இருக்கவே அப்பணம் திருமதி.R. பிரேமா ஞானகுமாரி அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அந்த Account Statement-தாளில் நான், மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.பிரேமா ஞானகுமாரி மற்றும் காவல் ஆய்வாளர் அவர்களும் கையொப்பம் செய்து, அந்த ஒரு தாள் கைப்பற்றப்பட்டது. மேலும், அதே இழுவறையில் ஒரு பிளாஸ்டிக் டப்பாவில் பணம் இருந்தது. அந்த பணம் குறித்து திருமதி.R. பிரேமா ஞானகுமாரி அவர்களிடம் விசாரிக்க, அது 30.09.2021 தேதி இரவு 20.00 மணி முதல் திடீர் சோதனை ஆரம்பிக்கப்பட்ட 01.10.2021-ஆம் தேதி விடியற்காலை 05.25 மணி வரை வசூல் செய்யப்பட்ட அரசு பணம் ரூ.61,920/- என்று சொன்னார். அதற்கான Account Statement-ஐ மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கேட்க, அவர் அதற்கான Account Statement-ஐ கணினியில் இருந்து பிரிண்ட் எடுத்து, கையொப்பமிட்டு கொடுத்தார். அதில் User pgkumari Period 30.09.2021 to 01.10.2021 எனவும், Total 61,920 என இருந்தது. பின்னர், பிளாஸ்டிக் டப்பாவில் இருந்த பணத்தை எண்ணிப்பார்க்க, அதில் பணம் ரூ.61,920/- சரியாக இருக்கவே அப்பணம் திருமதி.R. பிரேமா ஞானகுமாரி அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அந்த Account Statement-தாளில் நான் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.பிரேமா ஞானகுமாரி மற்றும் காவல் ஆய்வாளர் அவர்களும் கையொப்பம் செய்து, அந்த ஒரு தாள் கைப்பற்றப்பட்டது. பின்னர், அதே இழுவறையில் மற்றொரு பிளாஸ்டிக் டப்பாவில் பணம் இருந்தது. அந்த பணம் குறித்து, மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கேட்க, அவர் தக்க முகாந்திரம் எதும் கூறாமல் அமைதியாக இருந்தார். அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் பணம் ரூ.8,390/- இருந்தது. தக்க முகாந்திரம் கூறாத மேற்படி பணம் ரூ.8,390/- கைப்பற்றப்பட்டது. பின்னர், சோதனைச்சாவடியில் கௌன்டர் மேஜை மற்றும் நாற்காலிகளுக்கு பின்னால் உள்ள மேஜையை சோதனை செய்ய, அந்த மேஜையின் இடது ஓரத்தில் அதன் மீது விரிக்கப்பட்டு இருந்த செய்தித்தாள்களுக்கு அடியில் பணம் இருந்தது. அந்த பணம் குறித்து, மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கேட்க, அவர் தக்க முகாந்திரம் எதும் கூறாமல் அமைதியாக இருந்தார். அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் பணம் ரூ.30,000/- இருந்தது. தக்க முகாந்திரம் கூறாத மேற்படி பணம் ரூ.30,000/- கைப்பற்றப்பட்டது. பின்னர், அந்த மேஜைக்கு கீழே வைக்கப்பட்டிருந்த Back Bag-ஐ சோதனை செய்ய, அதில் ஒரு லேடீஸ் பர்ஸ் இருந்தது. அதை திறந்து பார்க்க, அதில் பணம் இருந்தது. அந்த பணம் குறித்து, மோட்டார் வாகன

ஆய்வாளரிடம் கேட்க, அவர் அந்த பணம் தன்னுடைய சொந்த பணம் சுமார் ரூ.15,000/- என்று சொன்னார். மேலும், அந்த பணத்தை பணியாளர் கையிருப்பு தொகை பதிவேட்டில் பதிவு செய்துள்ளீர்களா என கேட்க, அவர் இல்லை என்று சொன்னார். அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பாாக்க, அதில் ரூ.13,720/- இருந்தது. அந்த பணம் எப்படி வந்தது என கேட்க, அதற்கு அவர் தக்க முகாந்திரம் கூறவில்லை. எனவே, மேற்படி தக்க முகாந்திரம் கூற இயலாத பணம் ரூ.13,720/- ஐ கைப்பற்றப்பட்டது. முன்னாள் படைவீரர்கள் கொடிநாள் வசூல் நன்கொடை ரசீது புத்தகங்கள் கேட்டு பெற்று பார்வை செய்து அதில் இருந்த பணம் மற்றும் ரசீது சரியாக காணப்பட்டதால் திரும்ப கொடுக்கப்பட்டது. இந்த இருதுறை திடீர் சோதனையில், தக்க முகாந்திரம் கூற இயலாத மற்றும் உரிமை கோராத பணம் ரூ.77,110/- கைப்பற்றப்பட்டது. 30.09.2021 காலை 08.00 மணி முதல் 01.10.2021 காலை 08.00 மணி வரை அரசின் வருவாய் குறித்த விவரங்கள் அடங்கிய 4 ஆவணங்களும், சோதனை சாவடி வருகை பதிவேடு, சோதனைச்சாவடி பணியில் இருக்கும் பணியாளர்கள் விவரப்பதிவேடு, பணியாளர்களின் கையிருப்பு தொகை விவர பதிவேடு, திருமதி.பிரேமா ஞானகுமாரி அவர்களின் . தினசரி நாட்குறிப்பு ஆகியவை வழக்கு நிமிர்த்தமாக கைப்பற்றப்பட்டன. மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையானது 01.10.2021 அன்று காலை 10.00 மணிக்கு முடிக்கப்பட்டு, மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகள் அனைத்தையும் இருதுறை திடீர்சோதனை செயல்முறை தயார் செய்து, அதில் நானும், திருமதி.பிரேமா ஞானகுமாரி, மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.நு.அ) மற்றும் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகியோர் கையொப்பம் செய்து அதன் நகல் திருமதி.பிரேமா ஞானகுமாரி, மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.நு.அ), போக்குவரத்து துறை சோதனை சாவடி, காட்பாடி, வேலூர் மாவட்டம் அவர்களுக்கு வழங்கப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டது. பொது ஊழியரான திருமதி.பிரேமா ஞானகுமாரி, மோட்டார் வாகன ஆய்வாளர் (தொ.நு.அ), போக்குவரத்து துறை, சோதனை சாவடி, காட்பாடி, வேலூர் மாவட்டம் அவர்கள் தமிழ்நாடு மோட்டார் வாகன சட்டம் மற்றும் விதிகளின் கீழ் நடைபெறும் விதிமிறல்கள் செய்யும் வாகன ஓட்டுனர்களுக்கு தனது அலுவல் பணியை முறையற்ற வகையிலும் நேர்மையற்ற முறையிலும் செய்து கொடுத்தமைக்காக அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருக்க லஞ்சமாக பணம் வசூல் செய்தும் அரசின் வருவாய்க்கு இழப்பு ஏற்படுத்தும் வகையிலும், எவ்வித அரசின் உத்தரவோ அல்லது உயர் அதிகாரிகளின் உத்தரவு ஏதும் இல்லாமல் தனி நபர்களை பணிக்கு அமர்த்தி இடைதரகர்களாக செயல்பட அனுமதித்தும் அரசு ஆவணங்களையும் கோப்புகளையும் கையாள அனுமதித்து சட்டத்திற்கும் விதிகளுக்கும் எதிராக செயல்பட்டு வந்துள்ளார். எனவே திருமதி.பிரேமா ஞானகுமாரி, மோட்டார் வாகன

ஆய்வாளர் (தொ.நு.அ), போக்குவரத்து துறை சோதனை சாவடி, காட்பாடி, வேலூர் மாவட்டம் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், இருதுறை திடீர் கூட்டு சோதனையில் கைப்பற்றப்பட்ட தக்க முகாந்திரம், கணக்கு கூற இயலாத மற்றும் உரிமை கோராத பணம் ரூ.77,110/-, கைப்பற்றப்பட்ட பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் இருதுறை திடீர் சோதனை சம்மந்தமான அசல் செயல்முறை ஆகியவற்றை நடவடிக்கைக்காக ஒப்படைக்கிறேன். ஒம்/- xxxxxxxxxxx 01/10/2021 (C.முருகன்) மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்.Sir/Madam, Received the complaint on 01.10.2021 at 16.30 hrs and registered a case in Vellore Vigilance and Anti-Corruption Cr.No.16/2021, u/s. 7(a) of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 and u/s 102 Cr.P.C on 01.10.2021 at 17.30 hrs. Sd/- xxxxxxxxxxx (S.VIJAYALAKSHMI) 01/10/2021, Ins/VAC/Vellore.

The FIR in original along with the Complaint, Joint Surprise check proceedings in original sent to the Hon'ble CJM and Special Judge, Vellore and sent the copies to the officers concerned.

S.Vijayalakshmi
1/10/21
Inspector of Police
Vigilance & Anti-Corruption
Vellore-1.